## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட பொதுக் கலைமாணித் தேர்வு (மீள்பரீட்சை) - நவம்பர் 2017

### TL 3101 ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு - கி.பி.19ஆம் நூற்றாண்டு வரை

நேரம்: 03 மணித்தியாலங்கள்

பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக

---

1. ஆரியச்சக்கரவர்த்திகள் கால வரலாற்று வரன்முறை கூறும் இலக்கியங்களின் பண்புகளை எடுத்துக் காட்டுக. (25 புள்ளிகள்)

2. அ. ஒல்லாந்தர் காலத்தில் சமயச் சார்பான இலக்கியங்கள் தோன்றியமைக்கான காரணங்கள் யாவை? (05 புள்ளிகள்)

   ஆ. அக்காலச் சமய இலக்கியங்களின் பண்புகள் பற்றி விபரிக்குக. (20 புள்ளிகள்)

3. பள்ளு இலக்கியங்களின் பொதுவான அமைப்பு முறையைச் சுருக்கமாக எடுத்துக் காட்டி, பதின்மூன்றாம் நூற்றாண்டு தொடக்கம் பதினெட்டாம் நூற்றாண்டு வரையான காலத்தில் ஈழத்தில் தோன்றிய பள்ளு இலக்கியங்களின் போக்குகளை எடுத்துக் காட்டுக. (25 புள்ளிகள்)

4. அ. ஆறுமுகநாவலர், சி.வை. தாமோதரம்பிள்ளை ஆகியோர் பதிப்பித்த நூல்கள் யாவை? (05புள்ளிகள்)

   ஆ. அவர்கள் நூல்களைப் பதிப்பித்தபோது கடைப்பிடித்த நெறிமுறைகளை எடுத்துக் காட்டுக. (25 புள்ளிகள்)

5. 19 ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் தோன்றிய மரபுவழி இலக்கியங்களில் சில பொருள் அடிப்படையில் புதுமையை நோக்கியவையாக உள்ளன" மதிப்பீடு செய்க. (25 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்கு** விளக்கக் குறிப்பு எழுதுக.
   1. யாழ்ப்பாண இராச்சியம் தோன்றுவதற்கு முற்பட்ட கால ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றுச் சான்றுகள்
   2. ஆரியச் சக்கரவர்த்திகள் காலக் காப்பியங்கள்
   3. உள்ளூர் பிரபுத்துவத்தைப் பற்றிப் பாடிய ஈழத்து இலக்கியங்கள்
   4. போத்துக்கேயர் கால ஈழத்து இலக்கியப் போக்கு

   (12 ½ x 2=25 புள்ளிகள்)